# புதுச்சேரி புதுமை படைத்திட, புரட்சிக் கவிஞர் மண்ணில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் புத்தெழுச்சியுடன் குவிந்தனர் பாரீர்!



## ‘பெஸ்ட் புதுச்சேரியாக மாற்றுவோம்’ என்று சொன்னார் பிரதமர் மோடி! –ஆனால்

# புதுச்சேரியை ‘வொர்ஸ்ட்டாக’ ஆக்கியுள்ளது என்.ஆர். காங். - பா.ஜ.க. கூட்டணி!

## சங்கிப் படையை விரட்டியடிப்போம் - புதுச்சேரி பரப்புரைக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் சாடல்!

புதுவை, ஏப்.7–

**‘பெஸ்ட் புதுச்சேரியாக ஆக்குவோம் என்று சொன்னார் பிரதமர் மோடி; ஆனால், வொர்ஸ்ட் புதுச்சேரியாக ஆக்கியிருக்கிறது என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி! புதுச்சேரியை நாசமாக்கி வரும் சங்கிப்படையை விரட்டியடிப்போம்!’ என புதுச்சேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாகச் சாடினார்.**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (06-04-2026) புதுச்சேரியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:**

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் உள்ளிட்ட திராவிட இயக்கத்தின் தீரமிகு வீரர்கள் வாழ்ந்த புதுச்சேரிக்கு நான் வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டின் சகோதர மாநிலமான புதுச்சேரியின் புது வளர்ச்சிக்காக உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டுக்கும் - புதுச்சேரிக்கும், எப்போதும் ஒன்றாகத்தான் தேர்தல் நடக்கும்! ஆனால், இந்த முறை மாற்றி, புதுச்சேரிக்கு முன்கூட்டியே நடத்துகிறார்கள்... தேதியை மாற்றினால், நம்முடைய உணர்வுகளை மாற்றிவிட முடியுமா?

### புரட்சிக் கவிஞர் மண்ணிலிருந்து பேசுகிறேன்!

“பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு” என்று பாடிய, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மண்ணில் நின்று, புதுச்சேரியை நாசமாக்கியுள்ள சங்கிப்படையை விரட்டியடிக்க - தி.மு.க. கூட்டணிக்கு வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

கடந்த ஒரு வாரமாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களைச் சந்தித்து, வாக்கு கேட்டுக் கொண்டு இருக்கிறேன். தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த உணர்வு என்பது, மீண்டும் திராவிட மாடல் அமைய வேண்டும்! அதைத்தான் விரும்புகிறார்கள்! டெல்லியின் ரிமோட் கண்ட்ரோலுக்குத் தலையாட்டும் அடிமைகள் கூட்டத்தை தமிழ்நாட்டு மக்கள் விரும்பவில்லை. அதே உணர்வுதானே புதுச்சேரி மக்களான உங்களிடமும் இருக்கிறது? இருக்கிறது (மக்கள்). என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணியை வீட்டுக்கு அனுப்ப நீங்கள் தயாரா? தயார் (மக்கள்).

புதுவை நிலம், புதுமையான நிலமாக மாற - இந்த மேடையில் இருக்கும் நம்முடைய முப்பது வேட்பாளர்களையும் நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்று கேட்க வந்திருக்கிறேன்!



### புகழ் பெற்ற புதுச்சேரியை பா.ஜ.க.வும் – என்.ஆர்.காங்கிரசும் கெடுத்துவிட்டார்கள்!

சாதாரண மண்ணா இது? புகழ்பெற்ற புதுச்சேரி! இந்த மண்ணை பா.ஜ.க.வும் - என்.ஆர்.காங்கிரசும் என்ன நிலைமைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்?

எப்படிப்பட்ட தலைவர்களைக் கொடுத்த மண் இது?

புதுச்சேரி விடுதலைக்கு வித்திட்ட மக்கள் தலைவர் வ. சுப்பையா -

போற்றுதலுக்குரிய வெங்கட சுப்பா ரெட்டியார் -

புதுவை விடுதலைப் போரில் கலந்து கொண்டு, மாணவப் பருவத்திலேயே அரசியலுக்கு வந்து, முதலமைச்சராக முத்திரை பதித்த ஃபரூக் மரைக்காயர் -

புதுச்சேரியின் குரலை நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்த புதுவை சிவம் -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், தன்னுடைய திட்டங்களால் மக்கள் மனதை வென்ற எம்.டி.ஆர். ராமச்சந்திரன் -

தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் உருவாக்கிய உழவர் சந்தைகளை, புதுச்சேரிக்கும் கொண்டுவந்த ஆர்.வி. ஜானகிராமன் -

நேர்மைக்கு இலக்கணமாக திகழ்ந்த தலைவர் ப. சண்முகம் -

புதுச்சேரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிய ப. கண்ணன்,

வைத்திலிங்கம் என்று,

இங்கு தோன்றிய மாண்புமிக்க அரசியல் தலைவர்கள் ஏராளம்!

### பாரம்பரியப் பெருமைகளை இழக்கும் புதுச்சேரி!

ஆனால், இன்றைக்கு - பாரதீய ஜனதா கட்சி, அரசியல் மாண்புகளையே குழி தோண்டி புதைத்துக் கொண்டு இருக்கிறது! இவர்கள் செய்யும் அட்ராசிட்டிகளால் புதுச்சேரி மண், தன்னுடைய பாரம்பரிய பெருமைகளை இழந்து கொண்டிருக்கிறது!

இதை சரிசெய்யத்தான் நம்முடைய திராவிட ஆழ்வார் அன்புக்குரிய ஜெகத்ரட்சகன் அவர்களை தலைமைக் கழகத்தின் சார்பில் நான் அனுப்பி வைத்தேன். அவரும், புதுச்சேரியை வளர்த்தெடுக்கத் தேவையான வளர்ச்சி அரசியலை பேசி - கடுமையாக உழைத்து - என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கொட்டத்த அடக்கும் வகையில், ஒரு கூட்டணியை உருவாக்கினார். புதுச்சேரியை அழிவில் இருந்து காக்க - புதுச்சேரியை வளர்க்க - நமது கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று அன்போடும் உரிமையோடும் நான் கேட்கிறேன். வெற்றி உறுதியா?

அழகான புதுச்சேரியில், N.D.A. கூட்டணியின் அலங்கோலமான ஆட்சி நடக்க நீங்கள் அனுமதிக்கலாமா?நம்முடைய டிமாண்ட் என்ன? ஒட்டுமொத்த புதுச்சேரியின் கோரிக்கை என்ன? புதுச்சேரி - மாநிலம் ஆக வேண்டும்! பதினாறு முறை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவிட்டோம். ஆனால், ஒன்றிய அரசுக்கு மனமில்லை! இல்லை என்று சொல்லி கையை விரித்துவிட்டார்கள்! ஏன் என்றால், பா.ஜ.க.வைப் பொறுத்தவரைக்கும் - தமிழ்நாடு போன்ற மாநிலங்களை முனிசிபாலிட்டிகளாக மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதேபோன்று, புதுச்சேரிக்கு மாநில தகுதி வழங்காமல், ஊராட்சி அளவுக்கு ட்ரீட் செய்கிறார்கள்.

### ஆளுநர் மூலம் ஆட்சி! பொம்மை முதல்வர் ரங்கசாமி!

இங்கு இருக்கும் உங்கள் அமைச்சர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா? சட்டசபைக்கு மாண்பு இருக்கிறதா? உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்கு மரியாதை யாவது இருக்கிறதா? இங்கு ஆல்-இன்-ஆல் யார்? ஆளுநர்! ஆளுநர் மூலமாக ரங்கசாமி அவர்களை பொம்மை முதலமைச்சராக வைத்திருப்பவர்கள், சாமானிய மக்களையா வாழ விடுவார்கள்?

இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்! அதற்கான அருமையான வாய்ப்புதான் வரும் ஏப்ரல் 9-ஆம் தேதி! புதுச்சேரியின் புதிய விடியலுக்கான நாள், ஏப்ரல் 9. விடியலுக்குப் புதுச்சேரி தயாரா? தயார் (மக்கள்). புதுச்சேரியை மட்டுமல்ல; மக்களாட்சியையும் காக்க வேண்டிய கடமை உங்கள் கையில் இருக்கிறது! நீங்கள் தேர்ந்தெடுக்கும் அரசு, உங்களுக்காக செயல்படும் அரசாக இருக்க வேண்டும். டெல்லியின் கட்டளையை நிறைவேற்றும் அரசாக இருக்கவே கூடாது.

இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப் போராட்டத்தில் பல தியாக திருவுள்ளங்களை கொடுத்தது, இந்த புதுச்சேரி. எப்போதுமே எதிரிகள் என்ன செய்வார்கள்? ஒரு இனத்தை வீழ்த்த வேண்டும் என்றால், அவர்களின் மொழியை அவர்களிடம் இருந்து அப்புறப்படுத்துவார்கள். தாய்மொழியை இழந்த இனங்கள் வாழ்ந்ததில்லை. இதுதான் வரலாறு! நம்முடைய தாய்மொழியையும் - தமிழினத்தையும் காக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்! புதுச்சேரியில் இப்போது என்ன நடந்து கொண்டு இருக்கிறது? ஆரம்பக் கல்வி நிலையங்களிலேயே C.B.S.E. கல்வியை கொண்டுவந்து, தாய்மொழிக் கல்வியை அழித்திருக்கிறது, என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி அரசு!

இப்போது சொல்லுங்கள்... இந்த N.D.A. கூட்டணி, தமிழுக்கும் - தமிழருக்கும் எதிரான கூட்டணிதானே? இவர்களை மறுபடியும் ஆள அனுமதிக்கலாமா?

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு இங்கு வந்த மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள், பெஸ்ட் புதுச்சேரியாக ஆக்குவோம் என்று சொன்னார். ஆனால், என்ன ஆகியிருக்கிறது? வொர்ஸ்ட் புதுச்சேரியாக ஆக்கியிருக்கிறது என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி!

### புதுச்சேரியை நாசமாக்கிய பா.ஜ.க. கூட்டணி!

சில நாட்களுக்கு முன்பு, இங்கு வந்த மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள், “டபுள் எஞ்சின் ஆட்சியால் வளர்ச்சி அதிகமாகியிருக்கிறது” என்று பேசியிருக்கிறார். எங்கு வளர்ந்திருக்கிறது புதுச்சேரி? ஒருவேளை, கடலுக்கு அந்தப் பக்கம் இருக்குமோ?

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்

### டப்பா எஞ்சினை மறுபடியும் கொண்டு வருவோம் என்று பேசலாமா...?

**நம்முடைய புதுச்சேரியின் நீண்ட கால கோரிக்கை என்ன? மாநில தகுதி வேண்டும்! அதைப்பற்றி அவர்கள் பேசவில்லை. அவர்களுக்கு தேவை என்றால், ஒரு மாநிலத்தையே உடைத்து, புது மாநிலத்தை உருவாக்குவார்கள்! அது போன்று, புதுச்சேரிக்கு மாநில தகுதி வழங்க முடியாதா? இவ்வளவு நடந்த பிறகும் – புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து இல்லை என்று, துரோகம் இழைத்த பிறகும் – பாலாறும் தேனாறும் ஓடும் என்று சொல்லி, அதே வாக்குறுதியை கொடுத்து, மக்களை ஏமாற்ற வருகிறார்கள் என்றால், அவர்கள் புதுச்சேரி மக்களை பற்றி என்ன நினைக்கிறார்கள்! எந்த முகத்தை வைத்துக் கொண்டு, பிரதமர் உங்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்? இப்படிப்பட்ட டப்பா எஞ்சினை மறுபடியும் கொண்டு வருவோம் என்று பேசலாமா? இவ்வளவு அவலங்களை புதுச்சேரி சந்தித்ததற்கு பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும்தான் காரணம்.**